இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 141 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 16 – புதன்கிழமை 31 டிசம்பர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 141: Thiruvalluvar Year - 2056 - Margazhi 16 - Wednesday 31 December 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




## திராவிட மாடல் 2.0 வும் – பெண்களுக்கான ஆட்சியாகத்தான் இருக்கும்!

# வெல்லும் தமிழ்ப் பெண்களே! வெற்றியைத் தேடித் தாருங்கள்!

## பல்லடமே கருப்பு – சிவப்பு கடலாய் மாறிய “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” கழக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.12.2025) திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற, “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” கழக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார்.

**பல்லடம், டிச.31–**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (29.12.2025) திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற்ற “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” – கழக மகளிரணியின் மேற்கு மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு எழுச்சியுரை ஆற்றுகையில், “வெல்லும் தமிழ்ப் பெண்களே... வெற்றியைத் தேடித் தாருங்கள்! திராவிட மாடல் 2.0–வும் பெண்களுக்கான ஆட்சியாகத்தான் இருக்கும்! என்று குறிப்பிட்டார்.**

**முதல்வர் – கழகத் தலைவர் அவர்கள், இம்மாபெரும் மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு:**

கருப்பு - சிவப்புக் கடல்போன்று இலட்சக்கணக்கான பெண்கள், தாய்மார்கள், இப்படி ஒரே இடத்தில் கூடியதாக வரலாறே இருக்காது. உங்களைப் பார்க்கும் போதே, பவர்ஃபுல்லாக இருக்கிறது! பவர்ஃபுல்லாக மட்டுமல்ல, “வுமன் (Woman) பவரால் தி.மு.க மீண்டும், பவருக்கு வரப்போவதும், உறுதியாகி இருக்கிறது”. உறுதியாகிவிட்டதுதானே? மகிழ்ச்சி!

**ஆற்றல்மிக்க செயல்வீரர் – அன்புச் சகோதரர் செந்தில் பாலாஜிக்கு எனது பாராட்டுகள்!**

இப்படியொரு பவர்ஃபுல் மாநாட்டுக்கான பணிகளை எல்லாம் முழுமையாகத் தன் தோளில் சுமந்து, மிகச் சிறப்பாக - வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியிருக்கும் ஆற்றல்மிக்க செயல்வீரர் என்னுடைய அன்புச் சகோதரர் செந்தில் பாலாஜி அவர்களுக்கு முதலில் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகள்!

எந்தக் களத்தில் இறங்கினாலும், அவருக்குக் கொடுத்த பணியை பிரம்மாண்டமாகச் செய்யக்கூடியவர் செந்தில் பாலாஜி அவர்கள்! மேற்கு மண்டல மாவட்டங்களில் இருக்கும் மக்களின், அன்பும் - ஆதரவும் - அவருடைய திறமையும் ஒன்று சேர்ந்து, நம்முடைய எதிர்பார்ப்புகளை மட்டுமல்ல; அதற்கும் மேல், நிறைவேற்றிக் காட்டக்கூடியவர்!

அதேபோன்று, இந்த மாநாட்டுக்குத் தலைமையேற்றிருக்கும் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் குழுத் தலைவர் - என் அன்புத் தங்கை கனிமொழி அவர்களுக்கும், அவருக்குத் துணையாக உடன் நிற்கும் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்!

கனிமொழியைப் பொறுத்தவரை, கவிஞர் - பத்திரிகையாளர் - மரபுக் கலைகளில் ஆர்வம் கொண்டவர் என்று பன்முகத் திறமை கொண்டவர். எப்போதுமே, புன்னகை மாறாத முகத்துடன் இருப்பார். இப்போதுகூட பாருங்கள். அதேவேளையில், நாடாளுமன்றத்தில் உரிமைக் குரல் எழுப்பும்போது, கர்ஜனை மொழியாகவும் சீறுவார்! அதுமட்டுமல்ல, தேர்தல் என்று வந்துவிட்டாலே, தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைதான் 'ஹீரோ'. அந்த 'ஹீரோ'வையே தயாரிக்கும் பொறுப்பை இப்போது அவர் ஏற்றிருக்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், அந்தப் பணியை அவர் செய்தபோது, முழுமையான வெற்றி பெற்றோம்! வரும் சட்டமன்றத் தேர்தலிலும், மாபெரும் வெற்றியைப் பெறப்போகிறோம். அது உறுதி!

**பெண்களின் முன்னேற்றமே, நாட்டின் வெற்றி!**

நிறையப் பேர், “இப்போது எதற்கு மகளிர் மாநாடு?” என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது; பெண்களின் முன்னேற்றமே, நாட்டின் முன்னேற்றம்! பெண்களின் வெற்றியே, சமூகத்தின் வெற்றி! அடிமைத்தனத்தை உடைத்து, பகுத்தறிவுச் சுடரை கையில் ஏந்தி, தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - கட்டியெழுப்பிய தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது.

**திராவிட இயக்கத்தில் பெண்களின் முக்கியப் பங்கு!**

நம்முடைய அந்த மாபெரும் மரபைப் பற்றி நம்மைக் கேள்வி கேட்கிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! 1916-இல் நீதிக்கட்சி தொடங்கியபோது முதல் கூட்டத்திலேயே ஒரு பெண் கலந்துகொண்டார். அவர்தான் அலமேலு மங்கைத் தாயாரம்மாள்! அதேபோன்று, இன்றைக்கு நாம் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டு இருக்கும் சுயமரியாதை இயக்கத்தை 1925-ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கினார்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## கழகத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார் கனிமொழி!



**கனிமொழியைப் பொறுத்தவரை, கவிஞர் – பத்திரிகையாளர் – மரபுக் கலைகளில் ஆர்வம் கொண்டவர் என்று பன்முகத் திறமை கொண்டவர். எப்போதுமே, புன்னகை மாறாத முகத்துடன் இருப்பார். இப்போதுகூட பாருங்கள். அதேவேளையில், நாடாளுமன்றத்தில் உரிமைக் குரல் எழுப்பும்போது, கர்ஜனை மொழியாகவும் சீறுவார்! அதுமட்டுமல்ல, தேர்தல் என்று வந்துவிட்டாலே, தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைதான் 'ஹீரோ'. அந்த 'ஹீரோ'வையே தயாரிக்கும் பொறுப்பை இப்போது அவர் ஏற்றிருக்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், அந்தப் பணியை அவர் செய்தபோது, முழுமையான வெற்றி பெற்றோம்! வரும் சட்டமன்றத் தேர்தலிலும், மாபெரும் வெற்றியைப் பெறப்போகிறோம். அது உறுதி!**